# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 09.03.2026**

**OS No. : 244/2019**

**Dw : 1**

**Name : திரு. இசக்கிமுத்து**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான்தான் விவரம் சொன்னேன். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் செங்கோட்டை தாலுகா, மேலூர் கிராமம், லால்குடியிருப்பு தெற்கு தெருவில் கதவு எண். 2-2-158 ல் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி, கதவு எண். 1-3-110, புளியரை கிராமம், காமராஜர் நகர், பகவதிபுரம் ரோட்டில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். வாதி குடியிருக்கும் வீடுதான் பிராது தபசில் சொத்து என்றால் சரிதான். வழக்கில் இறந்துபோன சுப்பையாநாடார் என்பவர் வாதியின் முகவரியில்தான் வசித்துவந்தார் என்றால் சரிதான். மேற்படி வீட்டின் முன்புறம் 6 கடைகள் அமைந்துள்ளன என்றால் சரிதான். கடந்த 2012 ம் வருடத்திலிருந்து வாதி மேற்படி முகவரியில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். வாதி பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் அனைத்தும் சரிதான் என்றால் சரிதான். பிராதில் கண்ட சொத்துக்களை தவிர்த்து சுப்பையா நாடாருக்கும் அவரது மனைவிக்கும் வேறு சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். நான் சுப்பையா நாடாரின் 2 ம் கால் வாரிசு என கட்சி செய்கிறேனா அல்லது எனது பெயருக்கு உயில் எழுதிவைக்கப்பட்டுவிட்டது என கட்சி செய்கிறேனா என்றால் சட்டக்கால் வாரிசு என்ற அடிப்படையிலும், உயில் எழுதி

வைக்கப்பட்டதன் அடிப்படையிலும் நான் கட்சி செய்கிறேன். தபசில் சொத்து எனக்கு பாத்தியமானது என நான் இதுவரை எதிர்கோருரிமை செய்யவில்லை என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்களை என்னிடம் ஒப்படைக்கவேண்டும் என நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். சுப்பையா நாடார் உயிருடன் இருந்த காலத்தில் எந்தெந்த வங்கியில் எவ்வளவு தொகையை வைப்பீடு செய்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். பாண்டியன் கிராம வங்கியில் பணம் போட்டிருந்தார், எவ்வளவு என்று எனக்கு தெரியாது. செங்கோட்டை ஸ்டேட் பாங்கிலும் பணம் போட்டிருந்தார். வாதி மேற்படி வங்கி கணக்கிலிருந்த பணத்தை எடுத்துக்கொண்டாரா என்றால் எடுத்துக்கொண்டார்.

2) இறந்துபோன சுப்பையா நாடாருக்கு இதுவரை வாரிசு சான்றிதழ் பெறப்படவில்லை என்றால் சரியல்ல, பெறப்பட்டுள்ளது. வாரிசு சான்றிதழ் வாதியின் வசம் இல்லை என்றால் சரிதான், அது என் வசம்தான் உள்ளது. வங்கியில் உள்ள சுப்பையா நாடாரின் பணத்தை எடுக்க வேண்டுமென்றால் வாரிசு சான்றிதழ் வேண்டும் அல்லது நாமினியாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். சுப்பையா நாடார் தன்னுடைய நாமினியாக வாதி சுரேஷ் குமாரை நியமித்ததன் அடிப்படையில் வாதி பணத்தை பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். சுப்பையா நாடாரின் பணத்தை வாதி வசம் ஒப்படைக்கக்கூடாது என வங்கியில் நான் தடங்கல் மனு தாக்கல் செய்தேனா என்றால் வாய் மொழியாக ஆட்சேபனையை சொன்னேன். அதனை தொடர்ந்து நான் வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். சுப்பையா நாடாரின் ஷிப்ட் காரினை தற்போதும் வாதிதான் தன் வசம் வைத்துள்ளார் என்றால் சரிதான். வங்கியிலிருந்து வாதி பெற்றுக்கொண்ட பணத்தையும் சுப்பையாநாடாரின் காரையும் என் வசம் ஒப்படைக்க வேண்டும் என இவ்வழக்கில் நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். சுப்பையா நாடாரின் கடைசி காலத்தில் வாதி சுரேஷ் குமார் அவரை நல்லபடியாக பராமரித்து

வந்த காரணத்தினாலும், அன்பின் காரணத்தினாலும் வாதி சுரேஷ் குமாரை தன்னுடைய வங்கி கணக்கில் நாமினியாக நியமித்து தனக்கு சொந்தமான காரையும் சுரேஷ் குமாருக்கு சுப்பையா நாடார் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

3) எங்கள் பகுதியில் மாரியம்மாள், வள்ளியம்மாள் என்ற பெயர்கள் பொதுவாக வைக்கப்படும் பெயர்கள் என்றால் சரிதான். நான் இறந்துபோன சுப்பையா நாடாரின் 2ம் சட்டக்கால் வாரிசு என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு மாரியம்மாள், வள்ளியம்மாள் ஆகியோர் சுப்பையா நாடாரின் உடன் பிறந்தவர்கள் கிடையாது என்றும், வழக்கிற்காக தவறான தகவல்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பெயர் ஒற்றுமையை காரணம் காட்டி அதன் அடிப்படையில் நான் தவறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. மாரியம்மாளும், வள்ளியம்மாளும் சுப்பையா நாடாரின் சகோதரிகள் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கொடி வழி ஜாபிதா தவறானது என்றால் சரியல்ல. இறந்துபோன சுப்பையா நாடாரை பொறுத்து நான் 3ம் தரப்பினர் என்றும், எனக்கும் மேற்படி சுப்பையா நாடாருக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. அதனால்தான் நான் சுப்பையா நாடாரின் பணத்தையும், காரையும், சொத்தையும் வாதி பெற்றுக்கொண்ட பின்னர் அதனை மீண்டும் கேட்காமல் இருக்கிறேன் என்றால் சரியல்ல.

4) சுப்பையா நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் செங்கோட்டை சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். சிவகிரி சார்பதிவக அலுவலக எல்லையிலும் சுப்பையா நாடாருக்கு சொத்து உண்டு. அதற்குரிய ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு சுப்பையா நாடார் எழுதி வைத்த உயிலில் சிவகிரி சார்பதிவாளர் அலுவலக எல்லையில் உள்ள எந்தவொரு சொத்தும் காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ. 1 உயில்

ஆவணத்தில் 7 முதல் 9 பிரதிவாதிகளின் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணம் 10 ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டுள்ளது என்றும் அது அசல் ஆவணம் கிடையாது என்றும், கலர் ஜெராக்ஸ் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 10 ரூபாய் முத்திரைத்தாள் கடந்த 10.06.2007ம் வருடம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள A. இசக்கி முத்து என்ற நபர் நான்தான். பத்திரம் வாங்கிய நாள்முதல் அது என் வசம்தான் இருந்து வந்தது. மேற்படி பத்திர தாளை 2010ம் வருடம் சுப்பையா நாடாரிடம் கொடுத்தேன். சுப்பையா நாடார் உயில் எழுத வேண்டும் என்று என்னிடம் கேட்டதால் நான் என் வசம் இருந்த முத்திரைத்தாளினை அவரிடம் கொடுத்தேன். உயிலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு முழுமையாக தெரியாது. சுப்பையா நாடாருக்கு எந்தெந்த வங்கியில் எவ்வளவு கையிருப்பு உள்ளது என்ற விவரம் மேற்படி உயில் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவர் எப்போது மேற்படி உயில் ஆவணத்தை எழுதினார் என்றால் 2012ம் வருடம் ஜனவரி மாதம் எழுதினார். அப்போது நான் அவருடன் இல்லை, என்னுடைய மனைவியும், எனது அண்ணன் மனைவியும் உடன் இருந்தார்கள். எனது மனைவியின் பெயர் செல்வி. எனது சகோதரரின் மனைவி பெயர் முத்துக்கிளி. அவர்கள் இருவரும் சுப்பையா நாடார் உயில் எழுதும்போது உடன் இருந்தார்கள் என்றால் சரிதான்.

5) மேற்படி உயில் எழுதிய பின்னர் சுப்பையா நாடார் வேறு சொத்துக்களை வாங்கினாரா என்றால் வாங்கவில்லை. நான் சுப்பையா நாடாரின் கையெழுத்தை இதற்கு முன்னர் பார்த்திருக்கிறேன். நான் என்னுடைய இனிஷியலை முதலில் போட்டு அதனை தொடர்ந்து கையொப்பமிடுவேன். சுப்பையா நாடாரும் இனிஷியலை போட்டுத்தான் கையொப்பமிடுவார் என்றால் சரியல்ல. சுப்பையா நாடாரின் கையொப்பமே எனக்கு தெரியாது என்றும், அவர் எப்போதும் இனிஷியலை போட்டுத்தான் கையொப்பமிடுவார் என்றால் சரியல்ல. உயில்

எழுதப்பட்ட விவரம் என் மனைவி சொல்லி அன்றைய தினமே எனக்கு தெரியும் என்றால் சரிதான். யாருக்கு என்ன சொத்து எழுதிவைத்துள்ளார் என்ற விவரத்தை நான் என் மனைவியிடம் கேட்டேன், ஆனால் என் மனைவிக்கும் அந்த விவரம் தெரியவில்லை. பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணம் சுப்பையா நாடார் எழுதிவைத்தது கிடையாது என்றால் சரியல்ல. அதில் உள்ள கையொப்பம் சுப்பையா நாடாரின் கையொப்பம் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி உயிலானது, வழக்கிற்காக என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் மேற்படி உயில் ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. எந்த பத்திரத்தை பார்த்து மேற்படி உயில் ஆவணத்தை சுப்பையா நாடார் தயார் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிராது சொத்துக்களுக்குரிய மூல ஆவணங்கள் எதுவும் என் வசம் கிடையாது என்றால் சரிதான், அதனை சுரேஷ் குமார் எடுத்து சென்றுவிட்டார். உயில் ஆவணத்தை எப்போது சுப்பையா நாடார் என்னிடம் ஒப்படைத்தார் என்றால் 2012 ம் வருடம் என் மனைவியிடமும் எனது அண்ணியிடமும் அதனை ஒப்படைத்தார். அந்த சமயத்தில் மூல ஆவணங்களை சுப்பையா நாடார் எனது மனைவியிடமும், எனது அண்ணியிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மூல ஆவணங்களை என் வசம் ஒப்படைக்கவேண்டும் என நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 26.09.2019 ம் தேதி வாதி மூல ஆவணங்களை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், தபசில் சொத்திற்குள் வாதி வரக்கூடாது என்றும் நிலத்தை ஒப்படைக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மோசடி உயிலின் அடிப்படையில் நான் உரிமை கோருகிறேன் என்று சொல்லி போலீசார் என்னை கண்டித்து அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணம் மோசடியானது என்பதாலும், நான் சுப்பையாநாடாரின் சட்டக்கால் வாரிசு

கிடையாது என்பதாலும், மேற்படி புகாரில் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6) சுப்பையா நாடார் இறந்த பிறகு பி.வா.சா.ஆ. 1 உயிலின் அடிப்படையில் எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பட்டா மாற்றம் செய்ய முயற்சி செய்தேன் என்றும், பி.வா.சா.ஆ.1 உயில் மோசடியானது என்பதால் வருவாய் துறை அதிகாரிகள் அதற்கு மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 2 முதல் 4 வரையிலான ஏற்பாடு ஆவணங்களை சிவகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்தோம். ஒரே நாள், ஒரே நேரத்தில், ஒரே பத்திர எழுத்தர் தயார் செய்த ஆவணங்கள் அவை என்றால் சரிதான். மேற்படி 3 ஆவணங்களிலும் நானும் என் சகோதரர்களும் மாற்றி மாற்றி சாட்சி கையொப்பம் போட்டுள்ளோம் என்றால் சரிதான். செங்கோட்டையில் பிராது தபசில் சொத்துக்கள் உள்ள நிலையில் சிவகிரி சார்பதிவாளர் அலுவலகம் சென்று பி.வா.சா.ஆ. 2 முதல் 4 வரையிலான ஆவணங்களை பதிவு செய்யவேண்டியதன் அவசியம் என்னவென்றால் அங்கே தெரிந்த நபர்கள் உள்ளதால் அங்கு பதிவுசெய்தோம். பத்திர எழுத்தர் தெரிந்த நபர் என்பதால் அங்கே பதிவுசெய்தோம். பொதுவாக ஒரு சொத்தை ஒரே நாளில் வெவ்வேறு நபர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டு எழுதிக்கொடுக்க முடியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 முதல் 4 வரையிலான ஆவணங்களில் உள்ள கடைசி அயிட்ட சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனக்கு பாத்தியமானதாகும். அது எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆதரவு எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதில் காலி மனையும் உள்ளது, வீடும் உள்ளது. பி.வா.சா.ஆ. 2 முதல் 4 ஆவணங்களில் அது காலி மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 முதல் 4 வரையிலான ஆவணங்களில் உள்ள கடைசி அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் மற்றும் நான்குமால் ஒன்றுபோல் உள்ளன

என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 முதல் 4 வரையிலான ஆவணங்களில் உள்ள கடைசி அயிட்ட சொத்து பூமியில் கிடையாது என்றும், மோசடியாக மேற்படி ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதியை மோசடி செய்யவேண்டும் என்ற காரணத்தினால்தான் பூமியில் இல்லாத சொத்தை குறிப்பிட்டு சிவகிரி சார்பதிவாளார் அலுவலகத்தில் பி.வா.சா.ஆ. 2 முதல் 4 வரையிலான ஆவணங்களை பதிவுசெய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் அடிப்படையில்தான் பி.வா.சா.ஆ. 2 முதல் 4 வரையிலான ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணமே மோசடியானது என்பதால், பி.வா.சா.ஆ. 2 முதல் 4 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் வாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7) பிராதில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் நஞ்சை, புஞ்சை என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுப்பையா நாடாருக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சுப்பையா நாடாரின் அனைத்து சொத்துக்களுக்கும் பட்டா மாறுதல் பெறவில்லை என்றால் சரியல்ல. 06.06.2019 ல் செங்கோட்டை வட்டாட்சியர் மற்றும் பிற அதிகாரிகளுக்கு வா.சா.ஆ. 26 ஆவணம் மூலம் வாதி அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் செய்ததை ஆட்சேபித்த வாதி மாவட்ட ஆட்சியர் உட்பட மற்ற அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. தவறுதலாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது எனவும், பிற சொத்துக்களுக்கு பட்டா மாற்றம் செய்யப்படாது எனவும் வாதிக்கு பதில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாகத்தான் வா.சா.ஆ. 30 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 5 மற்றும் 6 ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. சுப்பையா நாடார் இறக்கும்வரை அவரது சொத்துக்களை

விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல, நான்தான் செய்துவந்தேன். சுப்பையா நாடார் எனது தாய் மாமா என்பதால் அவர் என்னை நிலத்தை கவனித்துக்கொள்ள சொன்னார். இந்த விவரம் எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சுப்பையா நாடார் இறக்கும் சமயம் வெளி நபர்களுடன் செய்த கொடுக்கல் வாங்கல் பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

8) வாதி வீட்டுடன் சேர்ந்து எத்தனை கடைகள் உள்ளன என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த கடைகளை வாதி யார் யாருக்கு வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் வாடகைக்கு விட்டுள்ளார் என்ற விவரம் மட்டும் தெரியும். அதில் என்னென்ன கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி கடை மற்றும் கடைகளுக்குரிய வரி ரசீதுகளை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் அவை அனைத்தும் எனது மாமாவின் பெயரில் ஏற்பட்ட ரசீதுகளாகும். சுப்பையா நாடார் இறந்த பிறகும் அவரது பெயரில் வாதிதான் தீர்வை செலுத்திவருகிறார் என்றால் வாதி அதன் அனுபவத்தில் இருப்பதால் அவர் செலுத்திவருகிறார். வா.சா.ஆ. 32 ஆவணம் லாலா குடியிருப்பில் உள்ள வீடு, கடை சம்பந்தப்பட்ட தீர்வை ரசீதுகள் என்றால் சரிதான், அவற்றை நான்தான் செலுத்திவருகிறேன். நான் வரி செலுத்தியதை காட்டுவதற்குரிய ஆதரவு எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். லாலா குடியிருப்பில் உள்ள வீடு மற்றும் கடையில் விவசாயம் செய்வதற்கான பொருட்களை வாதி பாதுகாத்து வருகிறார் என்றும், அதற்குரிய வரியை சுப்பையா நாடார் பெயரில் செலுத்திவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. சுப்பையா நாடார் இறக்கும்வரை அவரது நிலத்தை அவரும் வாதியும் விவசாயம் செய்துவந்தார்கள் என்றும், நான் எந்த காலத்திலும் அந்த நிலத்தில் விவசாயம் செய்தது கிடையாது என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9) சுப்பையா நாடார் எந்த தேதியில் இறந்துபோனார் என்றால் 18.03.2019 ம் தேதி இறந்துபோனார். அவரது இறப்பு குறித்து வருவாய் துறை அதிகாரியிடம்

பதிவுசெய்தது யார் என்றால் நான்தான் பதிவுசெய்தேன். எந்த தேதியில் பதிவுசெய்தேன் என்பது நியாபகமில்லை. அவர் இறந்துபோன ஒரு வாரத்திற்குள் இறப்பு குறித்து தகவல் தெரிவித்துவிட்டேன். சுப்பையா நாடாரின் மரணம் குறித்து அவர் இறந்த நான்காவது நாளிலேயே இவ்வழக்கின் வாதி 21.01.2019 ம் தேதி புளியரை சுகாதார ஆய்வாளரிடம் மனுசெய்து பதிவுசெய்தார் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு 01.02.2019 ம் தேதி மேற்படி இறப்பு சான்றிதழை நான் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. சுப்பையா நாடார் இறந்த விவரமே எனக்கு தெரியாது என்றும், அதனால்தான் உரிய நேரத்தில் அதுகுறித்து நான் பதிவுசெய்ய முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 2012 ம் வருடம் முதல் சுப்பையா நாடாரை வாதிதான் பராமரித்துவந்தார் என்றால் சரியல்ல. வாதியின்மீது சுப்பையா நாடாருக்கு இருந்த அன்பின் காரணமாகத்தான் வா.சா.ஆ. 18 உயில் ஆவணத்தை வாதியின் பெயருக்கு எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் சுப்பையா நாடாரின் தனிப்பட்ட விருப்பத்தில் அவர் நல்ல உடல்நிலை மற்றும் மனநிலையில் இருந்த சமயம் வாதிக்கு ஆதரவாக எழுதிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு சுப்பையா நாடார் எழுதிவைத்த உயில்தான் அவரது கடைசி உயில் என்றும், சுப்பையா நாடார் இறக்கும்வரை அதை மாற்றவோ ரத்து செய்யவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்பையா நாடார் இறந்தவுடன் வாதிக்கு எழுதிகொடுத்த உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், அதன் அடிப்படையில் பிராது தபசில் சொத்துக்களை வாதி அடைந்து அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி உயிலின் அடிப்படையிலும், வங்கியில் தனது நாமினியாக வாதியை நியமித்ததின் அடிப்படையிலும் வாதி சுப்பையா நாடாரின் வைப்பீடு பணத்தை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. சுப்பையா நாடார் சாகும்வரை நல்ல உடல்நிலையில் திடகாத்திரமாக இருந்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல.

10) பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணத்தின் முதல் பக்கத்தில் உள்ள சுப்பையா நாடாரின் கையொப்பத்திற்கும் மற்ற பக்கங்களில் உள்ள அவரது கையொப்பங்களுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் வித்தியாசம் உள்ளது ஆனால் அது அவரது கையொப்பம்தான். பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம், சுப்பையா நாடாரின் கையொப்பம் கிடையாது என்றும், அது என்னால் மோசடியாக போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சுப்பையா நாடார் எனக்கு எந்த வகையிலும் உறவினர் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. சுப்பையா நாடாரின் உயிலின் படி வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்துக்கள் அனைத்தும் வாதியின் அனுபவத்தில் உள்ள காரணத்தினால் அவர் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் பிராது சொத்துக்களை அனுபவித்தது கிடையாத என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன சுப்பையா நாடாரின் இறுதி சடங்குகளை வாதி அவரது சொந்த செலவில் நடத்தினார் என்று சொன்னால் சரியல்ல, நான்தான் நடத்தினேன். சுப்பையா நாடாரின் இறப்பு குறித்த தகவலே எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நானும் மற்ற பிரதிவாதிகளும் சுப்பையா நாடாரின் இறப்பில் கலந்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi